## மார்ச் மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | தலைப்பு | வேத பாடங்கள் | நடத்துபவர் | செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|---|
| 01-03-2016 செவ்வாய் | காலை 5.30 | வாக்குத்தத்த ஆராதனை ( திருவிருந்து ) | - | ஆயர் / லேலீடர் | அருள்திரு. டேனியேல் செல்லதுரை |
| 04-03-2016 வெள்ளி | மாலை 7.00 | தூய பேதுரு அடிகளார் லெந்து வெள்ளி IV | மத்தேயு 4:18-22 யோவான் 1:35-42 | ஆயர் / | திருமதி.மெரோலின் ஆலபர்ட் |
| 06-03-2016 ஞாயிறு | காலை 8.30 | திருவிருந்து ஆராதனை ஒடுக்கும் அமைப்பில் மாற்றம் | நாகூம் 1:1-15 லூக்கா 13:10-17 | ஆயர் / லேலீடர் | அருள்திரு. டேனியேல் செல்லதுரை |
| 11-03-2016 வெள்ளி | மாலை 7.00 | லெந்து வெள்ளி V நிக்கதேம் | யோவான் 3.1-16 லூக்கா 8:1-13 | ஆயர் | திரு.A. ஜோசப் லேலீடர் |
| 13-03-2016 ஞாயிறு | காலை 8.30 | சிலுவையும் சீடத்துவத்திற்கான ஒரு புதிய முன் மாதிரி | தொடக்க நூல் 26:12-13 மாற்கு 10:46-52 | ஆயர் | திரு.பால் பன்னீர் செல்வம் |
| 18-03-2016 வெள்ளி | மாலை 7.00 | லெந்து வெள்ளி VI சிரேன் ஊரை சேர்ந்த சீமோன் | மாற்கு 15:21-24 மத்தேயு 27:20-32 | ஆயர்/ லேலீடர் | திருமதி.ராணி ஜெயகுமார் |
| 20-03-2016 ஞாயிறு | காலை 8.30 | குருத்தோலை ஞாயிறு காலை பவனி புறப்படும் நேரம் 7.00 மணி ஓசன்னா : ஆண்டவரே | சகரியா 9:1 - 12 லூக்கா 19:29-40 | ஆயர்/ லேலீடர் | திரு.A. ஜோசப் லேலீடர் |
| 21-03-2016 பரிசுத்த திங்கள் | மாலை 6.30 | **பரிசுத்த வார கன்வென்ஷன் கூட்டங்கள்** | | ஆயர்/ லேலீடர் | டாக்டர். ராஜ்குமாரி சுந்தர் |
| 22-03-2016 பரிசுத்த செவ்வாய் | மாலை 6.30 | **பரிசுத்த வார கன்வென்ஷன் கூட்டங்கள்** | | ஆயர்/ லேலீடர் | டாக்டர். ராஜ்குமாரி சுந்தர் |
| 23-03-2016 பரிசுத்த புதன் | மாலை 6.30 | **பரிசுத்த வார கன்வென்ஷன் கூட்டங்கள்** | | ஆயர்/ லேலீடர் | சுவி.மேக்ஸ்வெல் லாசரஸ் |
| 24-03-2016 வியாகுல வியாழன் | மாலை 7.00 | திருவிருந்து ஆராதனை வியாகுல வியாழன் | விடுதலை பயணம் 12:1-7 I கொரி 11:23-34 | ஆயர் / லேலீடர் | அருள்திரு. டேனியேல் செல்லதுரை ஆயர் |
| 25-03-2016 வெள்ளி | காலை 11.30 | பெரிய வெள்ளி ஆராதனை மும்மணி தியானம் | லூக்கா 23: 33 - 49 யோவான் 19: 26 - 30 | ஆயர் / லேலீடர் | ஆயர் லேலீடர் மற்றும் சிறப்பு செய்தியாளர்கள் |
| 27-03-2016 ஞாயிறு | காலை 4.30 | உயிர்தெழுந்த திருநாள் - திருவிருந்து ஆராதனை எல்லையற்ற உருமாற்றத்தினை கொண்டாடுதல் | 2 சாமுவேல் 22:1-20 மாற்கு 16:1-8 | ஆயர் / லேலீடர் | அருள்திரு. டேனியேல் செல்லதுரை |

# மார்ச் மாதம் - 2016

# ஆயர்மடல்

சிலுவை நாதர் இயேசுவின் திருப்பெயரால் உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துதல்களையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

லெந்து காலங்கள் திருச்சபையின் வரலாற்றிலும் சமுதாய சூழலிலும் அவசியமான, சிறப்பான ஒன்று.

இக்காலங்களில் வழிவழியாக கடைபிடித்து வருகின்ற ஜெபம், உபவாசம், சிறப்பு தீர்மானங்கள், இவற்றில் நாம் புதிய சிந்தனைகளைப் பெற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

உண்மையான உபவாசம் எது? என்கிற சிந்தனையை, நமது விசுவாச பார்வைகள் சற்று விரிவாக்க, அதை கடைபிடிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். இக்காலங்களில் இறைவனின் பாடுகளும், மரணமும் நமது தனிப்பட்ட வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தி இருக்க வேண்டும். அப்படி ஏற்படுத்தியிருந்தால் அது தான் உண்மையான தபசு காலங்கள்.

இறைவனோடும், சகமனிதர்களோடும், சமுதாயத்தோடும் உறவு முறிக்கப்பட்ட மனிதன் மீண்டும் இவைகளோடு உறவினை புதுப்பித்துக் கொள்வதே லெந்து காலத்தின் அத்தியாவசியமாயிருக்கிறது, ஆகவே இந்த தபசு காலங்கள் உங்களுக்கு சிறப்பான வாழ்வோடும், அதிக ஈடுபாடுள்ள சேவையோடும் அர்ப்பணிப்போடும், இருக்கவும் இத்தருணத்தில் திருச்சபயின் ஒழுங்குகளில் பங்குபெற்று ஒத்துழைக்கவும் பணிவன்புடன் உங்களை கேட்டுகொள்கிறேன்.

சிலுவை உறவு உயிர்த்தெழுதலில் முழுமைபெறவும் சாட்சி பகிரவும், கிறிஸ்து உங்களுக்கு உதவிபுரிவாராக. கடவுளுக்கு ஸ்தோத்திரம் உண்டாகட்டும்.

அருட்பணியில் உங்கள் ஆயர்

**Rev.Daniel Chelladurai**

# கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு

## பாமாலை - 103

## என் அருள் நாதா, இயேசுவே!

## (When I Survey the wondrous Cross)

“நானே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டதிருப்பேனாக!”

– கலாத்தியர் 6 :14

இப்பாடலின் இரண்டாவது வரியாகிய, ‘சிலுவைக் காட்சிபார்க்கையில்’ என்பதில். “பார்க்கையில்” என்பது ஆங்கிலத்தில் **Survey** என்றிருக்கிறது. இப்பதம் நிலத்தை அளப்பதைக் குறிக்கும், நிலத்தை அளப்பவன், நிலத்தின் இருப்பிடம், வடிவம் பரப்பு, எல்லைகைகள் முதலியவற்றைத் தன் கண்களினாலும், அளக்கும் கருவிகளினாலும் தன் மனதில் திட்டவட்டமாகக் கணிக்க வேண்டும். இதையே இப்பாடலை எழுதியவர் தன் மனதில் எண்ணயிருக்கலாம் கிறிஸ்தவர்களாகிய நாம். அருள்நாதர் உயிர் துறந்த கல்வாரிச் சிலுவைக் காட்சியை இவ்வதமாவே ஆராயவேண்டும்.

சிலுவை காட்சியை நாம் நுட்பமாக ஆராயும்போது. நமது வாழ்க்கையிலுள்ள குறைகள் தென்படும், நமது சாதனைகளைக் குறித்து பெருமை பாராட்ட இடமிராது. மேலும் சிலுவைக்காட்சி வேதனை கொடுக்கும் ஒரு சின்னமாகத் தோற்றமளிக்கும் ஆண்டவரின் முகத்தில் முள்முடியினால் வடிந்த இரத்தம் பாய்ந்தோடுவதையும் கைளிலும், கால்களிலும் ஆணிகளினால் பாய்ந்த இரத்தத்தையும் காண்கிறோம். கல்வாரிச் சிலுவை பேரன்பும் துன்பும் கலந்தே பாய்ந்தோடும் காட்சியையும் அளிக்கிறது. நாம் இன்னும் பாவிகளாயிருக்கையில். அவர் நம்மை நேசித்தார். ஆகவே இச்சலுவைக் காட்சியின் முன் நாம் தலைகுனித்து, நம்மை அவருக்கு அர்ப்பணம் செய்ய ஏவப்படுகிறோம். சராசரங்கள் அனைத்தும் நமக்குச் சொந்தமாய் இருந்தாலும், அவை ஆண்டவரின் அன்புக்கு ஈடாகமாட்டார்.

இப்பாடலை எழுதிய ஐசக் உவாட்ஸ் பண்டிதர் 1674- ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17- ஆம் தேதி, இங்கிலாந்தின் சதாம்டன் நகரில், ஒன்பது குழந்தைகளில் மூத்தவராகப் பிறந்தார். அவரது தந்தை ஓர் ஆசிரியர் சதாம்டன் நகரிலுள்ள சகல பரிசுத்தவான்கள் அலயத்தின் குருவானவர் ஐசக் உவாட்சுக்கு லத்தின், கிரேக்க, எபிரெய மொழிகளைக் கற்றுக் கொடுத்தார், 1690- ல் அவர் சுய ஆளுகைக் சபையைச் சேர்ந்த ஒரு வேதசாஸ்திரப் பயிற்சி நிலையத்தில் பயின்று. 1697-ல் தமது இருபத்தி நான்காவது வயதில், லண்டன் மாநகரில் ஒரு சுய ஆளுகைச் சபையின் போதகராகத் திருப்பணியாற்ற ஆரம்பித்தார். சில ஆண்டுகள் பணி யாற்றியபின் அவரது உடல் நலம் குன்றியதால், திருப்பணியைவிட்டு 1714 – முதல் ஹெர்போர்டுஷயரிலிருந்த தமது நண்பர். ஸர் தாமஸ் அபினியுடன் நிரந்தரமாகத் தங்கியிருக்க வேண்டிவந்தது.

அவர் குருவாகப்பணியாற்ற ஆரம்பித்தபோது, அக்காலத்திலிருந்த கிறிஸ்தவப் பாட்டுப் புத்தகளில் காணப்பட்ட பாடல்களில் அதிருப் பதியடைந்து, தாமே பல பாடல்கள் எழுதினார். இரண்டு ஆண்டுகளாக அவர் எழுதிய பாடல்களை. ஆவிக்குரிய பாடல்களும், ஞானப் பாட்டுகளும் என்னும் பெயருடன் வெளியிட்டார். என் அருள் நாதா, இயேசுவே... என்னும் இப்பாடல் கலாத்தியர். 6:14 ஆம் வசனத்தின் பேரில், 1707 – ஆம் ஆண்டு எழுதப்பட்டது. பிரபல ஆங்கிலக் கவிஞரான மாத்யூ அர்னால்டு. இப்பாடலைப் பார்த்து. ஆங்கிலக் மொழியில் எழுதப்பட்ட பாடல்களில் மிகச் சிறந்த பாடல் எனப் போற்றியுள்ளார். தனது மரணப் படுக்கையிலும் இதையே கடைசியாகக் பாடி மகிழ்ந்தார். இப்பாடலுக்கு எட்வார்ட் மில்லர் என்பவர் எழுதிய என்னும் இராகம் மிகவும் அழகாக அமைந்துள்ளது.

ஐசக் உவாட்ஸ் பண்டிதர் ஒரு சிறந்த கவிஞர், மேலும் அநேக வேத விளக்கங்களும், சரித்திரம் தத்துல சாஸ்திரம் முதலியனவற்றைக் குறித்த கட்டுரைகளும் எழுதியுள்ளார் அவர் புகழ் பெற்றார். அவர் எழுதிய இதர பாடல்களில் பிரபலமானவை

வெள்ளங்கி பூண்டு மாட்சியாய் – பா. 168
பகவோன் கதிர் போலுமே – பா. 212
கர்த்தாவே, யுக யுகமாய் – பா.253
நான் உம்மைப்பற்றி ரட்சகா – S.S. 883

அவர் 1748 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25- ஆம் தேதி காலமானார். அவரது ஞாபகார்த்தமாக, லண்டன் மாநகரில் வெஸ்டுமினிஸ்டர் ஆபி என்னும் தேசீயப் பேராலளத்தில் ஒரு ஞாபகச் சின்னம் எழுப்பப் பட்டிருக்கிறது.

**- Nishada’s**

# Birthdays in The Month of February

| | |
|---|---|
| March 01 | Mr. P.Thangamani |
| March 02 | Mrs. S. Tabitha Salome |
| March 03 | Mrs. I. Vidhya Priyadharshini |
| | Mr. K .U. Benjamin |
| March 04 | Mr. P. G. Arun |
| | Miss. P. Callin Bernice Accunta |
| | Mr. M. Mervin Gabrial |
| March 05 | Mr. I. Charles Samuel |
| March 07 | Mrs. S. Joisy Vimala |
| March 10 | Mr. K. Arputha Raj |
| | Mr. A. Paul Pradeep |
| | Mr. J. Jimreeves S. Samuel |
| March 13 | Mrs. M. Ilakiya |
| | Master. Felix Jacob Dawson |
| March 14 | Master.Chris Jeremiah |
| March 15 | A. Sherin |
| March 17 | I.Gethsiyal |
| March 18 | Master. B. Ryan David |
| March 19 | I.Divya |
| | Mrs. S. Shinny |
| | Mr. J. Praveen Isaac Samuel |
| March 21 | Miss. K. Jessica Pearlyn |
| March 23 | Master. Benny Sam |
| March 25 | Mr. J.Samuel Joshua |
| | Mrs. P. Ponnuthai |
| | Miss. Tharani Grace Marianne |
| | Miss. Tharangini Mercy Joanne |
| March 27 | Mrs. Joseph Samraj |
| | Mr. G. Vigil Singh |
| | Mr. K. Dharmaraj |
| | Mrs. Cynthia Dinesh |
| | Mr. Hongton Kalai Arasan |
| March 29 | Mr. Illango Devaram |
| | Master. A. Jason |
| March 31 | Miss. S. Sunitha |

## Wedding Days In March

March 05 Mr. R. Joseph & Mrs. Jeeva Joseph



**பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கொண்டாடும்
அனைவருக்கும் திருச்சபையின் சார்பில்
வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!**



# Important Days in March

| | |
|---|---|
| March 01 | Zero Discrimination Day |
| March 03 | World Wildlife Day |
| | National Defence Day |
| March 04 | National Security Day (Rashtriya Suraksha Diwas) |
| | World Day of Fight Against sexual Exploitation. |
| March 08 | World Women's Day |
| March 12 | World Kidney Day |
| March 14 | Pi Day |
| March 15 | World Consumer Rights Day |
| March 19 | Earth Hour (8.30 PM to 9.30 PM) |
| March 20 | International Day of happiness |
| | World Sparrow Day |
| March 21 | International Day for the Elimination of Racial Discrimination |
| | World Poetry Day |
| | World Down Syndrome Day |
| | International Day of Forest |
| March 22 | World Water Day |
| March 23 | World Meteorological Day |
| March 24 | World Tuberculosis Day |







π
Pi Day
March 14









# வேத வினா - விடை போட்டி

## மார்ச் மாத கேள்விகள்

## வெளிப்படுத்தின விசேஷம் ( வசன ஆதாரம் தரவும் )

1. தேவன் யாரை கடிந்து கொண்டு சிட்சிக்கிறார்?
2. மரணத்திற்க்கும், பாதாளத்திற்கும் உரிய திறவு கோலை உடையவர் யார்?
3. பூர்த்தி செய்யவும்: எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை .......................
4. வெட்டுக்கிளிகளுக்கு எந்த விதமான வல்லமை கொடுக்கப்பட்டது?
5. எது எட்டி ஆனது? அதனால் என்ன விளைவுகள் ஏற்பட்டன?
6. யோவான் சாப்பிட்டபோது அந்த புஸ்தகத்தின் ருசி அவருக்கு எப்படி இருந்தது.
7. அந்த தூதன் தூபகலசத்தை எதினால் நிரப்பினான்.
8. யோலின் சாப்பிட்ட சிறு புஸ்தகம் எதை குறிப்பிடுகிறது?
9. 5ஆம் அதிகாரத்தில் கிறிஸ்து 3 விதமாக அறிவிக்கப்படுகிறார், அவைகள் யாவை?
10. 70,000 + 80,000 + 3300 (பழைய ஏற்பாடு)

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 20-03-2016**

<u>விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி</u>

**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**
எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை – 600 099.

குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்

csinewlifeinjesus@gmail.com 9444 633129

**www.csinewlifeinjesus.org**

## வெற்றி பெற வாழ்த்துகிறோம்!

இவ்வாண்டு பண்ணிரெண்டாம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவ மாணவிகளை திருச்சபையின் சார்பாக வெற்றி பெற வாழத்துகிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மாணவ மாணவிகளுக்கு ஞானத்தை அருள்வாராக!



# <u>சென்ற மாத போட்டியின் விடைகள்</u>

1. II கொரிந்தியர் 1: 1
2. II கொரிந்தியர் 2 : 17
3. II கொரிந்தியர் 1 : 20
4. II கொரிந்தியர் 13 : 1
5. II கொரிந்தியர் 2 : 4
6. II கொரிந்தியர் 2 : 16
7. II கொரிந்தியர் 3 : 16
8. II கொரிந்தியர் 2 : 13
9. II கொரிந்தியர் 4 : 3
10. லேவி 26 : 8

## பத்து கேள்விகளுக்கும் மட்டும் சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
2. திருமதி. கீதா ஹென்றி
3. திருமதி. ஜாய்ஸ் விமலா
4. திருமதி. கலா சுந்தரகுமார்
6. திருமதி. ஸ்வீட்டிலின் ரிச்சர்ட்
7. திருமதி. புஷ்பா ஞானராஜ்
8. திருமதி. தேவ ரோஸ்லின்
9. திருமதி. லீலா டிக்சன்

## படித்ததில் பிடித்தது

ஆடு மேய்த்த **தாவீது**
என்னை அரசனாக்கும் என்று மன்றாடியதும் இல்லை
அடிமையாய் சென்ற **யோசேப்பு**
என்னை அதிபதியாக்கும் என்று வேண்டியதும் இல்லை
சிங்க கெபியிலே வீசப்பட்ட **தானியேல்**
என்னை விடுவியும் என்று கதறியதும் இல்லை

**“உண்மை கிறிஸ்தவனுக்கு எல்லாம் தேடிவரும்.”**

**- A.Joseph**

**“கவிஞர்களின் பார்வையில் இயேசு கிறிஸ்து,” “சங்கீதம் ஓர் அலசல்” இவை இரண்டும் அடுத்த இதழில் இடம் பெறும்.**

## பேராசை

ஆசைகள் பலவிதம். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆனால் ஏவாளுக்கு ஏற்பட்ட ஆசை எல்லா ஆசைகளுக்கும் மேலான, தேவர்களைப் போல் ஆக வேண்டும் என்றதோர் ஆசை. இன்று நம்மில் பலரிடம் உள்ள ஆசைகள் பேராசைகளாக வளர்ந்து தீமையான பல விளைவுகளைத் தருகின்றன என்பதை அன்றாடம் காண்கின்றோம். இவற்றைப் பரிசுத்த வேதாகமத்தின் சில நிகழ்வுகளால் காண்போம்.

**தேவர்கள்போல் ஆக ஆசை:**

''நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன். உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும், நீ உன் இருதயத்தில் சொன்னாயே; ஆனாலும் நீ அகாதமான பாதாளத்தில் தள்ளுண்டு போனாய்" (ஏசாய 14: 14,15)

ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்கு தேவன் உருவாக்கிக் கொடுத்த ஏவாள் என்ற பெண்ணின் பேராசையால் முதன் முதலாக உலகில் பாவம் பிறந்தது. தேவன் ஆதாமிடம், "நீங்கள் சாகாதபடிக்கு இத்தோட்டத்தின் நடுவிலே உள்ள நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்" என்று கட்டளையிட்டார். இந்தக் கட்டளையை ஏவாளும் நன்கு அறிந்திருந்தாள்.(ஆதி. 2:17, 3:3)

ஆனால் சாத்தானாகிய பாம்பு ஏவாளிடம் "இக்கனியைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்பட்டு, நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல இருப்பீர்கள்" என்னும் பேராசையைத் தூண்டியது இதனால் ஏவாள் தேவனின் கட்டளையை மீறி விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்தாள். கீழ்ப்படியாமை என்னும் பாவம் உலகில் நுழைந்தது. மனிதக்குலம் சாபத்துக்குள்ளானது. பாவத்தின் சம்பளம் மரணம் அன்றோ!

**மண்ணாசை:**

"ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும் மனுஷனரக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள் (1. திமோத்தேயு 6: 9)



லோத்தின் குடும்பத்தார் தூதர் இருவரால் எச்சரிக்கப்பட்டும் சோதோமை விட்டு வெளியே போகவில்லை. காரணம் அந்தப்பட்டணம் அத்தனை செழிப்பாக இருந்தது. தேவன் லோத்தின் குடும்பத்தார்மேல் மனதிரங்கி தூதர்களைக் கொண்டு லோத்தையும் அவன் மனைவியையும், இரண்டு குமாரத்திகளையும் கையைப்பிடித்து இழுத்து வெளியே கொண்டு போய் விடச் செய்தார். பின்பு தேவன் லோத்திடம், "உன் ஜீவன் தப்பி ஓடிப்போ; பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே, நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ" என்றார். லோத் அருகே உள்ள மலைக்கு ஓடிப்போனார். அனால் லோத்தின் மனைவி இத்தனை செல்வங்களையும் விட்டுப் போகிறேனே என்ற தணியாப் பொருளாசையால் ( மண்ணாசை) தேவனின் கட்டளையை மீறிப் பின்னிட்டுப் பார்த்தாள். உப்புத்தூண் ஆனாள் ( ஆதி. 19 :17,26) நாம் தேவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறோமா?

**பெண்ணாசை:**

"பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக..........................."
(உபாகமம் : 5: 21, யாத் 20:17)

தாவீது இராஜாவுக்கு, எத்தனையோ மனைவிமார்களும், மறுமனையாட்டிகளும் உண்டு, இருப்பினும் அழகுமிக்க உரியாவின் மனைவியை அடைந்தே தீரவேண்டும் என்ற இச்சையால் உரியாவைக் கொன்று, மோசே சட்டத்தின்படி அவளைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டான். (II சாமுவேல் 11: 2 – 27)

நாம் செய்தித்தாள்களில் இதுபோன்ற கொடுமையான நிகழ்வுகளை அன்றாடம் படிக்கின்றோம். கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் பெற்றோர் பிள்ளைகளையும் கொலை செய்கிறார்கள். இவை காம இச்சையின் விளைவு தானே. "காயீனால் கொல்லப்பட்ட ஆபேலின் இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது" என்ற தேவன் காயீனிடம் 'இந்தப் பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய்' (ஆதி 4: 10, 11) என்றார். இன்று இந்தப்பூமியின் பேரிடர்க்கு யார் காரணம்? சிந்திப்போம். உயிர்க்கொலைகள் மலிவுவிலை கடைச்சரக்கா? உலகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது? தீர்வு காண்போம்.

## பொன்னாசை ( பண ஆசை)

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது ( II திமோ 6:10) ,இயேசுவின் சீடர் பன்னிருவரில் ஒருவரான யூதாசிடம் பொருளாசை என்னும் சாத்தான் குடி கொண்டான். முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசுவை முத்தம் செய்து காட்டிக் கொடுத்தான். விளைவு – மனம் வருந்தி நான்று கொண்டு செத்தான். பணம் அவனை வாழவைத்ததா?

இன்று பணத்திற்காகக் குற்றமற்றவனைக் குற்றவாளி என்று எத்தனை ஏழைகளைப் பொய் சாட்சி கூறிக் காட்டிக் கொடுக்கிறார்கள். உயிர் இன்றி மூச்சு இல்லை; கையூட்டு (லஞ்சம்) இன்றி காரியம் இல்லை இது தானே நாம் வாழும் உலகம்!

மாணவர்களே! உங்களுக்கொரு வேண்டுகோள், தேர்வு வந்துவிட்டது. ஆம் பயப்படாதிருங்கள். ஒவ்வொருநாளும் படிப்பதற்கு முன் வேதத்தைப் படித்துப் தியானியுங்கள். பாடங்களைப் படித்தபின் நன்றி கூறுங்கள். தேர்வு எழுத ஏற்ற ஞானத்தைக் கடவுள் தருவார். உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக் கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் (யாக் 1: 5) அதிக மதிப்பெண்கள் பெற வேண்டும் என்ற ஆசையால் பிறரைப் பார்த்து எழுதாதீர்கள். குதிரை யுத்த நாளுக்கு ஆயத்தமாக்கப்படும். ஜெயமோ கர்த்தரால் வரும் (நீதி 21: 31)

வாலிபர்களே! எச்சரிக்கையாயிருங்கள். ஆண்டவரின் பிள்ளைகளை எப்படி வஞ்சிக்கலாம் என்று கர்ச்சிக்கும் சிங்கத்தைப் போலச் சாத்தான் சுற்றித்திரிகிறான். பிறரைப் போல வாழ வேண்டும் என்ற பேராசையை விட்டொழியுங்கள். மாம்சத்தின் இச்சையும் கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகள் எல்லாம் பிதாவினாலுண்டானவைகள் அல்ல. அவைகள் உலகத்தினால் உண்டானவைகள். உலகமும் அதன் இச்சையும் ஒழிந்துபோம் தேவனின் சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் ( I யோவான 2 : 16, 17) என்பதை நினைவில் கொண்டு கர்த்தரின் கிருபைக்காகக் காத்திருப்போம்.

இயேசுவே உமக்கே மகிமை உண்டாவதாக!

கிறிஸ்துவில் அன்புச் சகோதரி

**புலவர் புஷ்பா ஞானராஜ்** M.A



## கொல்கதாவின் கோரக் காட்சி

வசந்த காலத்தில் வல்லமை உள்ள தேவனுக்கு
நம் வாழ்க்கையை ஒடுக்குவோம்

அப்படி ஒடுக்கும் போது நாம் ஓடினாலும் இளைப்படைவதில்லை
நடந்தாலும் சோர்ந்து போவதில்லை

கேட்பதற்கு காது உள்ளவன் கேட்கக்கடவன் என்றார்
காதுகள் இருந்தும் கேளாதவர் போலவே இருக்கிறோம்

இந்த லெந்து காலங்களில் பூ, மாமிசம் ஆடை
போன்றவற்றை வெறுத்தாலும்.

உள்ளத்தின் பூவாகிய களிப்பு. உடலின் இச்சையாகிய
மாமிசத்தின். இச்சை, ஆடை என்னும் ஜீவனத்தின் பெருமையை வெறுப்போம்

இதற்கு மாறாக மன்னிப்பு, இச்சையடக்கம், தாழ்மை
போன்றவற்றை தரித்துக் கொள்வோம்

கொல்கதா கொலை களத்தில் கொற்றவன் (இறைவன்)
கோரமாய் கொலையுண்டு சிலுவையில் தொங்கினார்

கொட்டிய இரத்தமும் கொலை நடுங்க வைக்க
சிந்திய வேர்வையும் இரத்தமாய் காட்சியளிக்க

கள்ளர் பத்தியில் ஒரு கள்ளன் போல காட்சியளித்தார்
காட்டி கொடுத்த யூதாசையும் கனிவாய் பார்க்க

தாயின் மனமும் தள்ளாட காண்பவர் கண்களில் கண்ணீர் குளமாக
வானமும் இருளாக, வாடைக் காற்றும் கனளாக

கள்ளமற்ற இறைவன் மனம் களைப்பாக, நா வறண்டு
நாடி நரம்புகள் நடு நடுங்கவும் சிலுவையில் தொங்கினார் நம் இறைவன்

இரக்கமற்ற போர் சேவகர்களும் ஈட்டியால் குத்த
விலா எலும்புகளும் துளையாக

கொடியவரின் வெறிச் செயலை கண்டு காண்பவரும்
வசை பாட, நெஞ்சம் தடுமாற நின்றனர்.

நமக்காக சிலுவையில் அறையப்பட்டார்
நாம் என்ன செய்தோம் அவருக்காக

இந்த பாத்திரம் என்னைவிட்டு நீங்க கூடுமானால்
என பரிவோடு பிதாவை, இறைவனின் கண்கள் ஏறெடுக்க

இனியும் நம் மனம் மாறவில்லையோ பாடுகளின் மைந்தன் பார்
ஆளும் வேந்தன் இயேசுவை பார்த்து.

ஆக்கம்

**பா. ஏவாள் மோன மெட்டில்டா**

ஆசிரியை